# முதல்வருக்கு வழிநெடுகிலும் உற்சாக வரவேற்பு! புகைப்படம் எடுத்து மகிழ்ந்த சிறார்கள்!

# உதகையில் 127-வது மலர்க் காட்சி! முதல்வர் திறந்து வைத்து அரங்குகளை கண்டு ரசித்தார்!





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.5.2025) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவில் 127வது மலர்க்காட்சியை தொடங்கி வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை – உழவர் நலத்துறை செயலாளர் வ. தட்சிணாமூர்த்தி, வேளாண்மைத் துறை இயக்குநர் பா. முருகேஷ், தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ. குமாரவேல் பாண்டியன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.5.2025) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவில் 127வது மலர்க்காட்சி தொடக்க விழாவில் கலந்துகொள்ள செல்லும் வழியில் பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பின்போது, குழந்தையை கொஞ்சி மகிழ்ந்தார்.


